# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:19** **தேதி:-09.02.2015**

**பாராளுமன்றம் நோக்கிய பேரணியும் வேறு சில மத்திய சங்க செய்திகளும்**

அன்பார்ந்த தோழர்களே,

பிப்ரவரி 25ஆம் தேதி டெல்லியில் பாராளுமன்றம் நோக்கிய பேரணிக்கான தயாரிப்பு பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. இது வரை நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் தமிழகத்தில் இருந்து BSNL ஊழியர் சங்கம் சார்பாக பங்கு பெற உள்ளனர். இந்த பேரணி நடைபெற உள்ள காலத்தில் டெல்லியில் பகல் நேரத்தில் பருவ நிலை இதமாகவும், காலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் குளிராகவும் இருக்கும். எனவே தோழர்கள் அதற்கு தேவையான ஆடைகளை எடுத்து வரவும். டெல்லி குளிரிலும் நமது வெப்பமான உணர்வுகளை அரசுக்கு தெரிவிப்போம். BSNLஐ காப்பாற்றும் இந்த பேரணியில் உத்வேகத்துடன் பங்கேற்போம்.

**கையெழுத்து இயக்கம்:-** பிப்ரவரி 25ஆம் தேதி நடைபெற உள்ள பாராளுமன்றம் நோக்கிய பேரணியின் இறுதியில் பொதுமக்களிடம் இருந்து நாம் பெற்றுத் தரும் ஒரு கோடி கையெழுத்துக்களை அகில இந்திய FORUM தலைவர்கள் பாரத பிரதமரிடம் வழங்க உள்ளனர். அதற்காக நமது தமிழகத்தில் நாம் பெற்றுள்ள கையெழுத்துக்களை பிப்ரவரி 15ஆம் தேதிக்குள் டெல்லிக்கு அனுப்ப வேண்டும் என அகில இந்திய FORUM முடிவு செய்துள்ளது. நாம் இதுவரை தமிழகத்தின் சார்பாக பெற்றிருந்த 1,60,000 கையெழுத்துக்களை கடலூரில் நடைபெற்ற கருத்தரங்கில் அகில இந்திய தலைவர்களிடம் வழங்கியுள்ளோம். மீதமுள்ளவற்றையும் உடனடியாக தமிழ் மாநில சங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**JTOவிற்கான புதிய தேர்வு விதிகள் மற்றும் E1 ஊதிய விகிதமும்:-** நிர்வாகக் குழுவால் (MANAGEMENT COMMITTEE) ஒப்புதல் வழங்கப்பட்ட புதிய JTO தேர்வு விதிகளை உடனடியாக அமுலாக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் புதிய CMDக்கு கடிதம் எழுதி உள்ளது. அதில் BSNL உருவான 14 வருடங்களில் JTOவிற்கான LICE ஒரே ஒரு முறை மட்டுமே நடைபெற்று உள்ளதை சுட்டிக்காட்டிய நமது மத்திய சங்கம் புதிய தேர்வு விதிகள் அமுலாக்கப்பட்டால், சேவைக் கால தகுதி ஐந்தாண்டுகளாக குறைக்கப்படுவதால், BSNLக்கு பலன் பெறும் வண்ணம் பல இளைய, தொழில் நுட்ப அறிவு பெற்ற தோழர்கள் JTOஆக பதவி உயர்வு பெறுவர். மேலும் இந்த தேர்வு விதிகள் அமுலாக்கப்பட்டால், பதவி உயர்வும், ஊதிய உயர்வும் இல்லாமல் பத்தாண்டு காலத்திற்கு மேல் JTOக்களின் பணிகளையும், பொறுப்புகளையும் மேற்கொண்டு வரும் 1700க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நிரந்தர JTOக்களாக பதவி உயர்வு பெறுவார்கள். மேலும், 2008ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கும், நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கான E1 ஊதிய விகிதத்தை உடனடியாக அமுலாக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் நமது மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**விளையாட்டு வீரர்களுக்கு:-** 2014ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச விளையாட்டு போட்டிகளில் முதல் பரிசு (தங்கப்பதக்கம்) வென்றவர்களுக்கு ரூ.1 லட்ச ரூபாய்களும், இரண்டாம் பரிசு (வெள்ளிப் பதக்கம்) வென்றவர்களுக்கு ரூ.50,000/- ரூபாய்களும், மூன்றாம் பரிசு (வெண்கலப்பதக்கம்) வென்றவர்களுக்கு ரூ.25,000/- ரூபாய்களும் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கார்ப்பரேட் அலுவலகம் கோரியுள்ளது.

அதே போல 2014ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய விளையாட்டு போட்டிகளில் முதல் பரிசு (தங்கப்பதக்கம்) வென்றவர்களுக்கு ரூ.50,000/- ரூபாய்களும், இரண்டாம் பரிசு (வெள்ளிப் பதக்கம்) வென்றவர்களுக்கு ரூ.25,000/- ரூபாய்களும், மூன்றாம் பரிசு (வெண்கலப்பதக்கம்) வென்றவர்களுக்கு ரூ.15,000/- ரூபாய்களும் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கார்ப்பரேட் அலுவலகம் கோரியுள்ளது.

2014ஆம் ஆண்டு விளையாட்டு துறையில் கீழ்கண்ட சாதனைகளை புரிந்தவர்களுக்கு, நமது நிர்வாகம் பாராட்டு பத்திரம், வெள்ளி பதக்கம் மற்றும் ரூ.10,000/- பரிசுப் பணம் கொண்ட SANCHAR KRIDHA AWARD தர முடிவு செய்துள்ளது.

அ) சர்வதேச குழு அல்லது தனிநபர் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்றவர்கள்.

ஆ) தேசிய அளவிலான போட்டிகளில் தனிநபர் போட்டிகளிலோ அல்லது BSNL குழுவில் இணைந்தோ முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசுகளை பெற்றவர்கள்.

இ) தேசிய அளவிலான போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற BSNL குழுவின் பயிற்சியாளர்.

இவைகளுக்கான விண்ணப்பங்கள் 28.02.2015க்குள் கார்ப்பரேட் அலுவலகங்களுக்கு தக்க சான்றிதழ்களுடன் அனுப்பப்பட வேண்டும்.

**கேடர் பெயர் மாற்றம்:-** கேடர் பெயர் மாற்ற பிரச்சனையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்க தலையிட வேண்டும் என நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் DIRECTOR(HR) திருA.N.ராய் அவர்களை 05.02.2015 அன்று சந்தித்து கேட்டுக் கொண்டுள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**